வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.139/20

வழக்கு சாட்சி - அ.சா.7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ்பாண்டி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ராஜபாண்டி | தொழில் | தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக உதவியாளர் |
| கிராமம் | அரண்மனைப்புதுார் | சமயம் | |
| தாலுக்கா | தேனி | வயது | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.06.24

( எதிரி ஆஜர். )

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது திண்டுக்கல் கோட்டம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 21..11.19 அன்று நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் போடி கிளையில் பணிபுரிந்தேன். அப்போது வண்டி எண். டிஎன் 57 என் 1982 தடம் எண். 655 பி என்ற பேருந்து விபத்து ஏற்படுத்தவிட்டதாக எனக்கு போன் மூலம் தகவல் வந்தது. மேற்படி பேருந்திற்கு ஓட்டுனராக பி.முருகேசன் என்பவரை அன்றையதினம் நான் பணி ஒதுக்கீடு செய்தேன். நடத்துனராக ஆர்.குணசேகரன் என்பவரை பணி ஒதுக்கீடு செய்தேன். விபத்து நடந்த தகவல் கிடைத்து நானும் இராதாகிருஷ்ணன் என்பவரும் பிசிபட்டி வாட்டர் டேங்க் ஸ்டாப்பிற்கு சென்றோம். நாங்கள் செலவ்தற்கு முன்பே காயம்பட்ட நபர்களை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள் போலிசார் அன்றையதினம் மேற்படி பேருந்திற்கு பணிஒதுக்கீடு செய்தது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். அதற்கான நான் சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் சான்று நான் வழங்கியது தான். அது அசாஆ.3.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களை தான் போலிச்விசாரணையில் கூறினேன். என்னை எங்களது அலுவலகத்தில் வைத்து போலிசார் விசாரிக்கவில்லை. காவல்நிலையம் வரவழைத்து விசாரித்தார்கள்.